பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
15 11 2024 **FRIDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பழங்குடியினர் பெருமை தினத்தை ஒட்டி, பீகார் மாநிலம், **Jamui**-ல், ஆறாயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

2. குருநானக் ஜெயந்தி இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, நாட்டு மக்களுக்கு குடியரசுத்தலைவர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3. தில்லியில் அதிகரித்து வரும் காற்று மாசு பாதிப்பை அடுத்து, இன்று முதல் மேலும் சில கட்டுப்பாடுகளை அம்மாநில அரசு விதித்துள்ளது.

4. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நைஜீரியாவுக்கு, இந்தியாவின் சார்பில் 15 டன் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

5. சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டி, ஹைதராபாதில் இன்று தொடங்குகிறது..

>>>>><<<<<

பழங்குடியின சமுதாயத்தினர் வளர்ச்சியடைந்தால் மட்டுமே நாடு உண்மையான வளர்ச்சி காண முடியும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பழங்குடியினர் பெருமை தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி அகில இந்திய வானொலியில் நேற்று அவர் உரையாற்றினார்.

பழங்குடியின மக்களின் விரைவான வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அதன் பொருட்டு நாட்டின் மேம்பாட்டுத் திட்டங்களில் பழங்குடியின மக்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதற்காக மூன்றாண்டுகளுக்குள் 24 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவிட திட்டமிடப்பட்டுள்ளதாக குடியரசுத்தலைவர் கூறினார்.

பழங்குடியின கிராம வளர்ச்சி திட்டத்தின் மூலம், 80 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன் மூலம், அனைத்து பழங்குடியினரும் அரசின் திட்டங்களை பெறுவது உறுதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும், இந்த திட்டங்களால். 5 கோடிக்கும் மேற்பட்டவர்கள் பயனடைவார்கள் என்று அவர் கூறினார்.

பழங்குடியினர் நலனுக்காக நடப்பு நிதியாண்டு பட்ஜெட்டில் 13 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இது கடந்த

ஆண்டைவிட 74 சதவீதம் அதிகம் என்றும் திருமதி. திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

குடியரசுத்தலைவரின் இந்த உரை அகில இந்திய வானொலியின் அனைத்து முதன்மை அலைவரிசைகளிலும் இன்று காலை மணி 8.45-க்கும், மாலை மணி 5.30-க்கும் மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

>>>>><<<<<

பழங்குடியின சமூகத்தினரின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட பகவான் பிர்ஸா முண்டாவின் 150வது பிறந்த தினம் இன்று பழங்குடியினர் பெருமை தினமாக கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, பீகார் மாநிலம், **Jamui**-ல் இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்று பல்வேறு திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

பகவான் பிர்ஸா முண்டாவின் நினைவு நாணயம் மற்றும் தபால்தலையை அவர் வெளியிடவுள்ளார்.

பழங்குடியினர் வசிக்கும் கிராமம் மற்றும் தொலைதூரப் பகுதிகளின் உள்கட்டமைப்புக்காகவும், அவர்களுடைய முன்னேற்றத்திற்காக 6 ஆயிரத்து 600 கோடி ரூபாய்க்கும் மேலான வளர்ச்சித் திட்டப் பணிகளை அவர் தொடங்கி வைக்கிறார்.

பழங்குடியின சமுதாயத்தைச் சேர்ந்த இரண்டு சுதந்திரப் போராட்ட வீரர்களின் அருங்காட்சியகங்கள், இரண்டு பழங்குடியின ஆராய்ச்சி மையங்கள் ஆகியவற்றையும் பிரதமர் திறந்து வைக்கவுள்ளார்.

பழங்குடியின சமூகத்தினருக்காக கட்டப்பட்டுள்ள 11 ஆயிரம் வீடுகளை பயனாளிகளிடம் பிரதமர் இன்று ஒப்படைக்கிறார்.

இந்நிகழ்ச்சியை அகில இந்திய வானொலி இன்று காலை மணி 11.30 முதல் நேரடியாக ஒலிபரப்பு செய்கிறது.

>>>>><<<<<

பழங்குடியின பெருமைதின விழாவை ஒட்டி, தமிழகத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள், மரக்கன்று நடுதல், மருத்துவ முகாம்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெறவுள்ளன.

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன் வட்டத்தில் உள்ள வெள்ளிமலையில் உள்ள பழங்குடியினர் பள்ளியில் மரக்கன்றுகள் நடும் விழாவை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் தொடங்கி வைக்கிறார்.

மாநிலம் முழுவதும் 328 பழங்குடியினர் பள்ளிகளில் பயிலும் சுமார் 24 ஆயிரம் மாணவர்களுக்கு, ஒரு மரக்கன்று வீதம் அந்தந்த பள்ளி வளாகங்களில் மரக்கன்றுகள் நடவு செய்யப்படவுள்ளது.

கல்வராயன் வட்டம், கலியனூர் கிராமத்தில் பழங்குடியின மக்களுக்காக மருத்துவ முகாம், வேளாண் உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் இன்று நடைபெறவுள்ளன.

சென்னை, திருவான்மியூரில் இன்று மாலை நடைபெறவுள்ள பழங்குடியினர் பெருவிழா தொடக்க நிகழ்ச்சியில், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கலந்து கொள்கிறார்.

>>>>><<<<<

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசின் சார்பில் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் வேலூர் மாவட்டத்தில் மலைவாழ் மக்களுக்கு தானிய வகைகளை இயந்திரங்களின் மூலம் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி, விற்பனை செய்ய நிதியுதவி வழங்கப்படுவது, தங்களுக்கு பெரிதும் உதவியாக உள்ளது என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

குருநானக் ஜெயந்தி இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குருநானக் பிறந்த தினத்தை முன்னிட்டு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் அனைத்து இந்தியர்களுக்கும், குறிப்பாக சீக்கிய சகோதர சகோதரிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருநானக் தேவ்-ன் போதனைகள் தார்மீக நெறிமுறைகளை நோக்கி நம்மை வழிநடத்துவதாக அவர் கூறியுள்ளார்.

சகோதரத்துவத்தை ஆதரித்த அவர், ஆன்மீகத்தின் பாதையை பின்பற்ற அனைவருக்கும் ஊக்கமளித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேர்மையையும், கடின உழைப்பையும் கடைபிடிக்கவும், தங்கள் வருவாயை தேவைப்படுவோருக்கு பகிர்ந்து கொள்ளவும் அவர் மக்களை ஊக்குவித்தார் என்றும் குடியரசுத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், குருநானக்கின் வாழ்க்கை ஆன்மீகம், சமத்துவம்,

இரக்கம் மற்றும் மனித சமுதாயத்திற்கான சேவை ஆகியவற்றை நோக்கி நம்மை வழிநடத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

உண்மை, நல்லிணக்கம் ஆகிய கொள்கைகளுக்கு நம்மை மீண்டும் அர்ப்பணிப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

அனைவரையும் உள்ளடக்கிய வளமான பாரதத்தை உருவாக்க அவரது போதனைகள் நமக்கு ஊக்கமளிக்கட்டும் என்று திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

>>>>><<<<<

நாட்டின் ஏற்றுமதி கடந்த ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான காலகட்டத்தில், 468 புள்ளி இரண்டு ஏழு பில்லியன் டாலராக உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட ஏழு புள்ளி இரண்டு எட்டு சதவீதம் அதிகம் என்று கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மஹாராஷ்ட்ராவில் சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவுக்கு இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில், அம்மாநிலத்தில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

புனே-யில் பிஜேபி சார்பில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில், ஹிமாச்சலப்பிரதேச முன்னாள் முதலமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு. ஜெய்ராம் தாக்கூர் கலந்து பேசினார்.

பிஜேபி கூட்டணியால் மட்டுமே வளர்ச்சிக்கான பணிகளை மேற்கொள்ள முடியும் என்றும், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

நான்டெட் மற்றும் நந்தூர்பார் மாவட்டங்களில் வாக்கு சேகரித்த காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, அரசியல் சாசனத்தை பாதுகாக்கவும், இடஒதுக்கீடு உரிமைகளை பாதுகாக்கவும், காங்கிரஸ் கட்சி உறுதிபூண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

>>>>><<<<<

தில்லியில் அதிகரித்து வரும் காற்று மாசு பாதிப்பை அடுத்து, இன்று முதல் மேலும் சில கட்டுப்பாடுகளை அம்மாநில அரசு விதித்துள்ளது.

இதையடுத்து, அனைத்து தொடக்கப்பள்ளி வகுப்புகளும் ஆன்லைன் மூலம் நடைபெறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியாளர்களை வீட்டிலிருந்தே பணிபுரிய அனுமதிக்குமாறு தொழில் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணிகள் மற்றும் கட்டிட இடிப்புப் பணிகள் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறுகிய தூரங்களுக்கு மிதிவண்டிகளை பயன்படுத்துமாறும், நடந்து செல்லுமாறும் தில்லி அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

நாகை துறைமுகத்திலிருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு இன்று முதல் வரும் 18ஆம் தேதிவரை பயணியர் கப்பல் சேவை மீண்டும் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இயற்கை காரணங்களால் வரும் 19ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 18ஆம் தேதிவரை இந்த கப்பல் சேவை நிறுத்தப்படுவதாக சிவகங்கை கப்பல் போக்குவரத்து சேவை நிர்வாகம் கூறியுள்ளது.

>>>>><<<<<

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதிபர் திரு. அனுரகுமார திசநாயக தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சி முன்னிலை பெற்றுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நைஜீரியாவுக்கு, இந்தியாவின் சார்பில் 15 டன் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள வெளியுறவு அமைச்சகம், உணவு, குடிநீர், மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட மேலும் 60 டன் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்படும் என்று தெரிவித்துள்ளது.

நைஜீரியாவில் நடப்பாண்டில் இதுவரை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், 321 பேர் உயிரிழந்தனர்.

7 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டி, ஹைதராபாதில் இன்று தொடங்குகிறது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தமிழக அணி – அந்தமான் நிகோபார் அணியை எதிர்கொள்கிறது.

மற்ற போட்டிகளில் மணிப்பூர் - சிக்கிம் அணியையும், ஆந்திரா – கர்நாடக அணியையும், திரிபுரா – மிஸோரம் அணியையும் எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான நான்காவது மற்றும் இறுதி டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவுமணி 8.30-க்கு தொடங்குகிறது.

>>>>>END<<<<<